உ

கடவுள் துணை.

சிறமணவூர்

முனிசாமிமுதலியாராலியற்றிய

# கலியுகச்சிந்து.

கடன்பத்திரம், கலிகாலக்கண்ணாடி

இம்மூன்றும் அடங்கியுள்ளன.

இவை

சென்னைப்புரசை

நாராயணசாமிப்பிள்ளை & பிரதர்

அவர்களது

நற்றமிழ்விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

விலை] 1922. [அணா-1.

37, சரவணப்பெருமாள்முதலிவீதி, புரசை, சென்னை.

உ

கடவுள் துணை.

# கலியுகச்சிந்து.

நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

சென்னை-600 005

பல்லவி.

காலத்தைப்பாராய் கலிகாலக்கொடுமையின்
கோலத்தைக்கேளாய்

அநுபல்லவி.

காலத்தின்கோலத்தை ஞாலத்தின்மேலோத
பாலொத்தமொழியாளே வேலொத்தவிழியாளே(காலூ)

சரணங்கள்.

அரிசிப்படிரெண்டு பணமாய்முழிக்குது
ஐயையோஎங்கள் புழுகாய்துடிக்குது
வரியெல்லாந்தலைக்குமேல் வாரண்டாய்த்திரிகுது
வாங்கியகடனேதான் கோர்ட்டுக்கிழுக்குது
புலம்புதேகுடிகள்-பனிரெண்டுமாதமும்-பொளக்குதேவெய்யல்
நாட்டுப்புரங்களெல்லாம் ஒட்டம்பிடிக்குது
நஞ்சைபுஞ்சைகளெல்லாம் பஞ்சாய்ப்பறக்குது
காடுமேடுகளெல்லாம் கட்டுதிட்டமாச்சுது
காக்காய்குருவிகூட பிழைப்பதரிதாய்போச்சுது(கால)
மழையோமழையோவென்று மானம்பார்க்கலாச்சி
மாடுஆடுகள்பேச்சி புல்லுக்கலையலாச்சி
தரையுமுலர்ந்துபோச்சி தண்ணீர்பன்னீராச்சி
தங்கத்தைவைத்தாலும் வட்டிகேட்கலாச்சி
முறைகெட்டுப்போச்சிதாயார்தமக்கைபோலேபெண்தேடலாச்சி
கொண்டமனைவிபேச்சி கூழுக்கலையலாச்சி
கூத்தியார்பாதத்தைக் காத்திருக்கலாச்சி
சொந்தப்படிப்பெல்லாம் சூத்துக்குமண்ணாச்சி
சொல்லுமிங்கிலீஷுக்கு நல்லபிழைப்பாச்சி(கால)
காட்டில்மழையாச்சி கழனிவுலர்ந்துபோச்சி
கலப்பைதாத்துக்கோலை யிறப்பிற்சொருகலாச்சி
போட்டவிரைகளெல்லாம் பொரியாய்பறந்துபோச்சி
பிள்ளைக்குட்டிகளெல்லாம் கஞ்சிக்கலையலாச்சி
மண்மாரியாச்சி-நாட்டுப்புறங்களெல்லாம்-கணமாரியாச்சி
இருந்தவிரைகளெல்லாம் ஏனோவிரைத்தோமென்று
இரவும்பகலுமாக முறையிட்டிருக்கும்போது
எடுஎடுவாயிதா பிடிபிடிஆளென்று
ஏழெட்டுபோாக வீட்டைவளைத்துக்கொண்டு
ஜப்திகளாச்சி-ஆடுமாடுகளெல்லாம்-ஏலமாய்ப்போச்சி

வீட்டுவரிவந்து வாசக்கால்தூக்குது
வியாபாரவரிவந்து சாமானைவளைக்குது
குப்பைவரிவந்து குடிசையைப்பிடுங்குது
கொளுத்தும்விளக்குவரி கழுத்தைப்பிடிக்குது
வேடிக்கையாச்சி-தட்டுமுட்டுகளெல்லாம்-வியபாரமாச்சி
களிதின்றுபிழைக்கவுங் கேவர்முறைக்குது
கம்புசோளங்கூட வம்புகள்செய்யுது
கூலிக்குபோனாலும், லஞ்சங்கள்கேட்குது
கொடுத்தாலும்நாலானாள் அடித்துத்துறத்துது(கால)
சீமைசீட்டிகளெல்லாம சிறப்பாய்சிரித்துப்போச்சி
சமுசாரிதாசியும் வேஷம்ஒன்றாய்ப்போச்சி
பொறுமையாய்ப்பிழைத்தவர் பிழைப்புக்குசிரிப்பாச்சி
பொய்சாட்சிசொல்வோர்க்குக் கைமேற்காசியாச்சி
கடைகெட்டுப்போச்சி-சர்வகுலங்களும்-நடைதப்பிபோச்சி
அந்தணர்குலத்துடன் ஆசாரம்போச்சுது
அவரவர்சாஸ்திரம் பாணைமேற்றாங்குது
பணமென்றார்பிணங்கூட வாய்கொஞ்சந்திறக்குது
பாசுபண்ணவர்பேச்சி வேலைக்குத்தொங்குது(கால)
தாயொப்பிவந்தாலுஞ் சேயன்புணரலாச்சி
தம்பிதமையன்பெண்டை தெம்பாயிழுக்கலாச்சி
நாய்போலேவிலைமாதர் எங்கும்பெருத்துப்போச்சி
நாயகனைப்பியே கூட்டிப்பிழைக்கலாச்சி
சுரணைகெட்டுப்போச்சி-பணமேபெருமையாச்சிசாதிகள்போச்சி
பலத்தவுத்தியோகத்தைப் பார்க்கமனைவியாச்சி
படுத்திருக்கும்போது அதேதுப்புணரலாச்சி
கலங்கிவேசியரெல்லாம் கண்ணீர்சொரியலாச்சி
கட்டினமனைவியை விட்டுப்பிழைக்கலாச்சி
வழிகெட்டுப்போச்சி-தகப்பன்பிள்ளையுங்கூட-வழக்காடலாச்சி
பூமியிற்பிழைப்பற்று காவியுடுத்தலாச்சி
பூரணமாய்கஞ்சாதம் அடித்துமயக்கலாச்சி
சாமியென்றவர்க்குப் பேர்கள்நிகளமாச்சி
சாம்பலைப்பூசவுங் தெரியாதவற்குசீச்சீ(கால)
கடுகடுத்துப்பெற்ற தாயையுதைக்கலாச்சி
கட்டினமனைவிசொல் தட்டாதிருக்கலாச்சி
கொடுத்தகடனைக்கேட்டால் கோர்ட்டைக்காட்டலாச்சி
கொஞ்சம்யேமாந்தாக்கால பஞ்சாயடிக்கலாச்சி
அஞ்சாமல்போச்சிபெரியோர்சிறியோரென்ற அளவும்போச்சி
அறுத்தமுண்டைகள்பிள்ளை பெற்றுவளர்க்கலாச்சி
அப்பனேமாந்தாக்கால் தாயைப்புணரலாச்சி
திருட்டுப்பிள்ளைகள்பெற்று முறித்துளறியலாச்சி
தெய்வத்தைநினைப்பவர் லட்சத்திலொருவராச்சி(கால)

கட்டிகொடுக்குமுன்னே கள்ளக்குட்டிகளாச்சி
கட்டினமூன்றுநாள் பெற்றுமுறிக்கலாச்சி
மட்டிமுண்டைகளாலே மானங்கெட்டுப்போச்சி
மாதாபிதாபேச்சி தலையைக்குனியலாச்சி
அதிகமாய்போச்சி-குடிசட்டிமுண்டைகள்-அணியணியாயாச்சி
பெண்டுகள்வியாபாரம் செய்துபிழைக்கலாச்சி
புருஷன்வெளுக்கக்கட்டி பின்தித்திரியலாச்சி
சண்டைசாவடிகளெல்லாம் பணத்தையிறக்கலாச்சி
சாமிக்குக்கொடுப்பவர் தரணியில்மருந்தாச்சி(கால)
பஞ்சாங்கம்படிப்பெல்லாம் பஞ்சாய்ப்பறந்துபோச்சி
பறைச்சிக்குப்பணந்தந்து சிறப்பாய்நடக்கலாச்சி
அஞ்சாமற்பறச்சோற்றில் அந்தணர்விழலாச்சி
அவர்கள்மனைவியெல்லாம் அழுதுபுலம்பலாச்சி
குலங்கெட்டுப்போச்சி-அந்தணராலே-குடிகெட்டுப்போச்சி
துரைக்குப்பிறந்தவன்போல டொப்பிசட்டைகளாச்சி
ஜோடுஞ்செருப்பும்போச்சி பூட்சுதூக்கலாச்சி
அடுப்பங்கரையிற்கூட இங்கிலீஷ்பேசலாச்சி
அல்லாருங்குடிக்கவே அடிக்கொருகடையாச்சி(கால)
சீமைதுரைகளெல்லாம் காவியுடுக்கலாச்சி
சாதிதமிழரெல்லாம் சட்டைமாட்டலாச்சி
காலந்தலைகீழாச்சி சரிப்புங்குடியாய்ப்போச்சி
கண்டவிடங்களெல்லாம் பைபிளரைச்சலாச்சி
வேதங்கள்போச்சி-கிறிஸ்தவர்கூச்சலே-வேடிக்கையாச்சி
கோயில்குளங்களெல்லாம் குட்டிச்சுவராய்ப்போச்சி
குடியாதிகமாச்சி கடைகள்பெருத்துப்போச்சி
கிராமதேவிகளெல்லாம் கடையாய்ப்பறந்துபோச்சி
கண்டவிடத்தில்வாந்தி பேதியதிகமாச்சி(கால)
கலியுகநடத்தைக்கு கடவுளுஞ்சிரிக்குது
காலத்திற்கேற்றப்போல் மாரிகள்வருகுது
குளிர்காச்சலிற்பாதி கூண்டோடேசாய்க்குது
குந்தியிருந்தபேரை வாந்தியில்மடக்குது
பேதியிற்பாதி-இப்படிமடிஞ்சியும்-துள்ளுதேகூவி-ஐயோ
இன்றைக்கிருந்தவர் நாளைக்கில்லையென்று
ஆர்க்குந்தெரியுமிந்த ஊர்க்குந்தெரியுமிது
ஏனோகருவங்கொண்டு வீணாகமடியுது
எண்ணிப்பார்த்தால்தினம் ஆயிரஞ்சாயுது(கால)
பணம்கையில்வருதென்று பொய்சாட்சிசொல்லாதே
பரதேசியேழைமேற் புலிபோலேதுள்ளாதே
முழுவேஷம்போட்டுநீ மோசங்கள்செய்யாதே
மூச்சிவெளியேபோனால் சீச்சீபிணமாச்சே
கெருவங்கொள்ளாதேநிலையில்லாகழுதைநீ-கெட்டுப்போகாதே

ஊற்றையுடலைநம்பி ஓதிபோலேகிகளாதே
ஊரைப்பகைத்துக்கொண்டு வேறுடன்மாளாதே
காற்றைமலைத்துக்கொண்டு கருமங்கள்தேடாதே
கலியுகச்சிந்தைநீ பழுதாகச்சொல்லாதே(கால)

கலியுகச்சிந்து-முற்றிற்று.

## கும்மி.

அண்ணனுக்குத்தம்பி துரோகம்செய்யுங்காலம்-அப்பனைப்-பிள்ளையுதைக்குங்காலம், பண்ணினநன்றிமறக்குங்காலம் பழி பாவத்துக்கஞ்சாக்கலிகாலம் (1)

புருஷனைப்பெண்டீருதைக்குங்காலம்-பெற்றபெண்ணைத் தகப்பன்புணருங்காலம், தருமநெறியை மறக்குங்காலங் கெட்டதருதலைக்கேற்றகலிகாலம் (2)

தங்கையை அண்ணன் புணருங்காலம்-ஐயா-தாயைப்பொலிந்துமடியுங்காலம், மங்கைக்குமஞ்ச ளரைக்குங்காலம் ஐயாமானமில்லாதகலிகாலம் (3)

கொண்டபுருஷனைத்திட்டுங்காலம்-இவள்- கூலிகொடுத்துப் புணருங்காலம், முண்டைகள்பிள்ளைபெருகுங்காலம் ஐயா மோசத்துக்கஞ்சாகலிகாலம் (4)

கட்டினமாது அலையுங்கால-மிவன்-காவியுடுத்தித்திரியுங்காலம், புட்டிப்புட்டியாய்க்குடிக்குங்காலம், ஐயா புளுகருக்கேற்ற கலிகாலம். (5)

பீயேயும்பீயெல்லும்படித்துவிட்டு-ஐயா- பிழைக்கஜீவனமில்லாமல், கையேந்திப்பூரிகள் வாங்கிப்பிழைக்கின்றார் கலியுகக்காலமிதுவல்லவோ. (6)

விக்கிரமாதித்தன் நாளையிலுந்தர்மவேதநெறிநளன்காலத்திலும், அக்கிறமப்படிகேட்டதில்லை ஐயோ அந்தணருத்தியோகஞ்செய்ததில்லை. (7)

சொந்தப்புருஷனைத் திட்டுங்காலமிவள் சொல்லாமற்றுய்விடுபோகுங்காலம், கணவன்மனைவியை அழைக்கவந்தா-லவனைக்-கண்டபடியாகத்திட்டுங்காலம். (8)

கள்ளத்தனமாய்புணர்ந்து பிள்ளைபெற்று கண்டவிடத்திலெறிந்துவிட்டு, நல்லசமுசாரிபோலேமினுக்கியே நாட்டைக்கெடுக்குங்கலிகாலம். (9)

புருஷனைப்பெண்சாதி திட்டுங்காலமையா புருஷன்றலையைக்குனியுங்காலம், கணவனைசாட்சியாய் வைத்துக்கொண்டிவள் கருத்தைப்போலே நடக்குங்காலம். (10)

**சொந்தப்பெண்சாதிக்குப் பயந்துவிட்டுமிவன் சொல்லாமல் ரெயிலிலேறுங்காலம், போனாலும்போகிறானென்றுசொல்லியிவள் பெற்றுவளர்க்குங்கலிகாலம்.** (11)

1868 17

பொய்யானபத்திரமெழுதுங்காலம் சாட்சிபூட்டியேகோர்ட்டில்கெலிக்குங்காலம், தெய்வப்பொருளைத் திருடுங்காலமிது தீவினைக்கஞ்சாக்கலிகாலம். (12)

அருமையறியா முரட்டுக்காலமிது கர்மியைப்போற்றுந் திருட்டுக்காலம், சிறுவன்சொல்லியவாக்கியப்படியே சோதித்துப்பார் கலிகாலகுணம். (13)

கும்மிமுற்றிற்று.

## நொண்டிச்சிந்து.

ஆறுமாதக்கடன்காரர்-அவருக்கு- அண்ணனென்றுரைக்கலாம்மாறுபாடிகள், நாறுமாறாய்க்காயலார்கள்- ஊரெங்கும்- தானாய்வலியவந்து கடன்கொடுத்து, பத்துக்கு அஞ்சிவட்டியாம்- அந்த பத்திரமெழுதுங் கூலியதுவேறேயாம், தருமத்தின்காசிவேறேயாம்-இப்படி-தந்திரமாயேழைகள் வாயிலடித்து, தட்டுமுட்டுதவலை சொம்பு-பெட்டிமுதல்-தந்ததெல்லாம்வந்தமட்டும் வலித்துக்கொண்டு, வாயிலொருகணக்குரைப்பார்-கணக்கிலே- வாங்கிவெகுநாளைப்போலே எழுதிடுவார், பணத்தைக்கொடுத்தனுப்புவார்-வாங்கியவன்-பாதிவழிபோகுமுன்னே சம்மனெடுப்பார். (தந்தினதனதனனம்)

இப்படியிவர்களெழவாம்- நாட்டுகளில் - ஈட்டிக்காரர்கொடுமைகேட்கப்பயமாம், சைதாப்பேட்டை துண்டுகளையும்- வைகுண்ட-சல்லாவைப்போல கந்தைகளைவாரிக்கொண்டு, வலைப்போல புடவைகளையும் - கவைக்கு-உதவாதடாபேஜிதுண்டுகளையும் கிழித்துக்கொண்டு, செம்மண்ணுப்பகுடர்களும-நல்ல-சேருப்போலேகரைதோய்த்துக்கொண்டு, கஞ்சியிலேபோட்டுப்பிழிந்து- கந்தைகளை-கருவாடுபோலுணத்தி மடித்துக்கொண்டு நாட்டுப்புரங் காடுமேடெல்லாம்-குமபலாய்- நாலைந்துபேராகநுழைந்திடுவார், நெல்லூருவேஷ்டிகளென்பார்-தூளெல்லாம் - நோகசீமைசாயம்போகாதென்பார், மதுரைப்புடவைகளென்பார்-இது-மாட்டு தோலைப்போலிருக்குங் கிழியாதென்பார், கடனுக்குத்தருவோமென்பார் நித்தியப-காலணாவீழுக்காடு கொடுங்க ளென்பார், தெரியாமற் கடனெடுத்தால்-தெரு-வாசற்படியிலபடுத்து காரிமுழிவார், கொடுத்தகடனைக்கேட்பார்-அவர்-குந்தினயிடத்தைவிட்டு அசையமாட்டார், சூனியங்கள்வைப்போமெனபார்-ஆடுமாடு- சுருண்டிடும்எவவிதோ செய்கிறோமெனபார். (தந்தின)

நொண்டிச்சிந்து-முற்றிற்று.

## கடன்பத்திரம்.

உலகமறியாதவருஷம் ஒருவருங்காணாதமாதம் ஒருநாளுமில்லாததேதியில் ஊரில்லாவூரிலிருக்கும் தலைகாய்ந்த தாண்டவராயமுதலியார்குமாரன் சனியன்பிடித்த சாம்பசிவமுதலியாருக்கு சரிப்படாதவூரிலிருக்கும் பித்தம்பிடித்தபேயாண்டிசெட்டியார் குமாரன் பேரில்லாதவன் பிரட்டி யெழுதிக்கொடுத்த குதுவையில்லாத கடன்பத்திரமாவதென்னவெனறால் இப்பவும் என்னுடைய

வீட்டிற்குகிழக்கு அவனுடையவீட்டிற்குமேற்கு அவளுடையவீட்டிற்குவடக்கு இவளுடையவீட்டிற்குதெற்கு இந்நாற்பாங்கெல்லைக்குட்பட நிச்சயித்து சென்னப்பட்டணம் சிலாமணிராசி கும்பினி ரூபாய் 500 இந்த ரூபாய் ஐந்நூறுக்கு மாதம்;- 1 - க்குரூபாய் 100-க்குவட்டிரூப்பாய 1-ஆக ஏறின வட்டியுமுதலும் தாங்கள்வேண்டாதபோது நான் கொடுக்காமற் போகக்கடவே னாகவும ஒருசமயம் அப்படிக்குகொடுக்கும்படிக்கு அர்ப்பியந்தப் பட்டால தாங்கள் எந்தகோர்ட்டிலாவதுபோட்டு கோர்ட்டுச் சிலவில்லாமல் அசல்பூஜியமாய் போகக்கடவீராகவும் இந்தப்படிக்குஎன்னுடைய மனோராஜியில் சம்மதித்து எழுதிக்கொடுத்த குதுவையில்லாத கடனபத்திரம்.

இதற்கு சாட்சி இவனோ அவனோ எழுதினவனெவனோ கையெழுத்து நடுவீதி நாராயணன்.

கடன்பத்திரம்-முற்றிற்று

## கலிகாலக் கண்ணாடி.

| | |
|---|---|
| தகப்பனுக்குமகனுழவு | பழக்குங்காலம் |
| தமயனுக்குத்தம்பிபுத்தி | சொல்லுங்காலம் |
| குருக்களிருந்தாசனத்தி | லிருக்குங்காலம் |
| கொடுத்தகடன்கேட்பவரை | யுதைக்குங்காலம் |
| வலக்கைபிடித்தரசாணி | சுற்றிவந்த |
| மாப்பிள்ளையைமருந்திட்டுக் | கொல்லுங்காலம் |
| கணக்கருக்குஅடிவழக்கு | பேசுங்காலம் |
| கலிகாலமாமிந்தக் | காலந்தானே(1) |
| வாய்வேகமாகறெயில் | ஓடுங்காலம் |
| வாய்பேச்சுதந்திவழி | பேசுங்காலம் |
| தாய்பேச்சுபிள்ளைகட்கு | விஷமாகுங்காலம் |
| தன்மனைவிமனதின்போல் | நடக்குங்காலம் |
| நாய்போலவிலைமாதர் | பெருததகாலம் |
| நம்பினோமென்றவரைக் | கெடுக்குங்காலம் |
| காதலெனும்மனையாளை | வணங்குங்காலம் |
| கலிகாலமிந்தக் | காலந்தானே(2) |
| முண்டச்சிகள்சந்துசந்தாய் | திரியுங்காலம் |
| முலைகாட்டிமோசண்டை | பரிக்குங்காலம் |
| தங்கைதலைதமையன்பெண் | டாளுங்காலம |
| தமையன்பெண்டைதம்பிசிறை | யெடுக்குங்காலம் |
| பருவப்பெண்திண்ணைமேல் | உட்காருங்காலம் |
| பரிகாசவவார்த்தைதனைப் | பேசுங்காலம் |
| கருவழிக்கமருந்திட்டுக் | கொல்லுங்காலம |
| கலிகாலமாமிந்தக் | காலந்தானே(3) |
| மாமனையேமருமகளும் | புணருங்காலம் |
| மாமியார்மருமகனை | மருவுங்காலம் |

பெற்றவளும்பிள்ளைதனைச் சேருங்காலமி
பெற்றவளுந்தகப்பனையே பிணையுங்காலம்
தன்மனைவிதிலோர்த்தமைபோ விருக்குங்காலம்
தடியர்களுமசந்துதாய் திரியுங்காலம்
காமமெனுங்கருங்கடலில் மூழ்குக்காலம்
கலிகாலமாயிந்தக் காலந்தானே(4)

சல்லைகயற்றுத்திண்ணைமேல் உட்காருங்காலம்
சம்சாரியென்றபேர் நீளுங்காலம்
கொங்கைதனைக்காட்டியே அழைக்குங்காலம்
கொழுந்தனுடன் ஆசைவைத்துப் பேசுங்காலம்
பாட்டிகளைப்போனபெண் டாளுங்காலம்
பாலகளைப்பெற்றுதா லாட்டுங்காலம்
களிப்புடனே வுடப்பிறப்பை புணருங்காலம்
கலிகாலமாயிந்தக் காலந்தானே(5)

பிள்ளைபெற்றுஆற்றோரம் போடலாச்சு
புருஷனடித்தால்விரையைப் பிடிக்கலாச்சு
கணவனையேமத்தாலே அடிக்கலாச்சு
களிப்புடனே தாய்வீடு சேரலாச்சு
பெண்ணவளுந்தாய்வீடு போகலாச்சு
பெற்றவருமகூட்டியே கொடுக்கலாச்சு
களிப்புடனே கூட்டியே பிழைக்கலாச்சு
கலிகாலமாயிந்தக் காலந்தானே(6)

அவுசாரிவுலகத்தில் அனேகமாச்சு
அன்னநடைதாசிகட்கு பிழைப்பும்போச்சு
புவிமீதில்கவிவாணர் பிழைப்பும்போச்சு
புத்தியில்லாமடையருக்கே காலமாச்சு
பருவப்பெண்பாட்டுகளும் பாடலாச்சு
பழுத்தகிழம்மாப்பிள்ளையைப் புணரலாச்சு
கற்றவரைக்கல்லாதார் இகழலாச்சு
கலிகாலமாயிந்தக் காலந்தானே(7)

முண்டைகளும்புருஷனையே தேடலாச்சு
முகமினுக்கிகண்டபடி திரியலாச்சு
அண்டைவீட்டுமன்னர்களை கெடுக்கலாச்சு
அடுத்தவரை அன்றைக்கே கொல்லலாச்சு
கொண்டைக்குமினுக்கெண்ணை வளர்க்கலாச்சு
கொழுந்தனுக்குப்பிள்ளைபெற்று வளர்க்கலாச்சு
கன்னியர்கள் கண்டவரைப் புணரலாச்சு
கலிகாலமாயிந்தக் காலந்தானே(8)

கலிகாலக்கண்ணாடி-முற்றிற்று.